**அரச அச்சக கூட்டுத்தாபனம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் (''கூட்டுத்தாபனம்'') 2019 இன் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத்தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்படவேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 21 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.
எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழியில்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனம் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனம் வருடாந்த

மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்று கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.

எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனம் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனம் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதி அறிக்கைகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காதது.

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 79 (ஆ) பந்தியின் பிரகாரம் வாடகை சேர்க்கப்பட்டுள்ள ஒதுக்கத்தின் தன்மை அதை பராமரிக்கும் நோக்கம் போன்றவற்றை வெளிப்படுத்த வேண்டியது கட்டாய மென்றிருந்தாலும், கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட்டுவருகின்ற ரூபா 102,491 ஆன மூலதன ஒதுக்கம் ரூபா 1,100,000 ஆன பொது ஒதுக்கம் மற்றும் ரூபா 13,901,142 ஆன அபிவிருத்தி ஒதுக்கம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே இந்த ஒதுக்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் இறுதி கணக்குகளில் இது போதுமான அளவு பதிவாக பயன்படுத்தப்பட்டுள்ளது. | நியமங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒதுக்கங்களின் தன்மை நோக்கங்கள் போன்றவை குறித்து வெளிப்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 12 இன் 81(இ) பந்தியின் பிரகாரம் வரிச் செலவுகள் (வருமானங்கள்) மற்றும் கணக்கீட்டு இலாபத்திற்கிடையிலான தொடர்பை தெளிவுபடுத்து முகமாக எண்ணிக்கையிலான இணக்கப்பாடொன்று ஒழுங்கு படுத்தப்பட வேண்டுமென்பதுடன் உரிய வரி விகிதமும் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்றாலும் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களிலும் அவ்வாறான வெளிப்படுத்தல் இடம் பெற்றிருக்கவில்லை. | கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டிலேயும் முன்னைய சில வருடங்கள் பூராகவும் நட்ட நிலைமையையே அடைந்திருந்ததுடன் வருமான வரித் தொகை பூச்சியமாக காணப்பட்டதனாலும் வரிச் செலுத்துவதற்காக வரி வருமான நிலைமையும் அறிக்கையிடப்படுத்தப்படவில்லை என்பதுடன் வரி வருமானங்கள் கணக்கிடும் போது ஒப்பீட்டளவில் சமர்ப்பிக்கவில்லை. | நியமங்களில் கூறப்பட்டுள்ளவாறு தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கியல் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிலே கூட்டுத்தாபனத்தின் பிரதான அச்சகத்தின் மற்றும் காகிதாகிகள் தொழிற்சாலையின் மூலப் பொருட்களை கொள்வனவு செய்யும் பெறுமதிகள், கிரயப் பிரிவின் அறிக்கையின் படி ரூபா 614,714,346 ஆக காணப்பட்ட போதும் நிதிக் கூற்றுக்களின்படி அது ரூபா 622,633,861 ஆக குறிப்பிடப்பட்டதனால் உற்பத்திக் கிரயம் ரூபா 7,919,515 வினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டிலே கூட்டுத்தாபனத்தின் பிரதான அச்சகத்தின் மற்றும் காகிதாகிகள் தொழிற்சாலையின் பயன்படுத்தப்பட்ட உற்பத்திக் கிரயம், கிரய அறிக்கையின் படி ரூபா 722,757,688 ஆக காணப்பட்ட போதும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 730,639,160 ஆக குறிப்பிடப்பட்டிருந்தனால் உற்பத்திக் கிரயம் ரூபா 7,881,472 வால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | இந்த கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு நடவடிக்கைகள் கையினால் (Manual) மேற்கொள்ளப்படுவதனால் ஏற்பட்ட வேறுபாடுகளே தவிர இடம் பெற்றுள்ள கணக்கீட்டு குறைபாடுகள் அல்ல. கிரயப் பிரிவிற்கு கொள்வனவாக பெறப்படுகின்ற சர்வதேச கொள்வனவுக்கு உரிய சில சிறிய கொடுப்பனவுகள் மற்றம் கட்டணங்கள் பெருமாபாலும் காலாவதயாகிய அடையாளங் காணப்படுவதுடன் அச் சந்தர்ப்பத்தில் அந்த மூலப் பொருட்கள் பாவனைக்குட்படுத்தப்பட்டு பாவனைச் செலவாக காட்டப்பட்டுள்ளதுடன் அவற்றை வெவ்வேறாக அடையாளங் காண்பது நடைமுறையில் கடினமாகக் காணப்பட்டது. | கிரயப் பிரிவில் கிரய அறிக்கை நாளது வரையாக பேணபட்டு வருதல் மற்றும் கிரய அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படுமாயின் இணக்கத்தின் மூலமாக அந்த வேறுபாடுகள் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிலே மூலப்பொருட்கள் கொள்வனவுகளின் கீழான மொத்தம் ரூபா 1,034,813 ஆன பெறுமதி சேர்வரி சீர் செய்தல் காரணமாக மீளாய்வாண்டிலே கணக்குகள் அந்த பெறுமதியில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | உரிய வரியின் இன்வொய்ஸ் பத்திரம் 2019 ஆம் வருடத்திலே பெற்றுக் கொடுக்கப்படாததன் காரணமாக அது தேசிய வருமானங்கள் திணைக்களத்திடமிருந்து பெறப்பட வேண்டிய வரியாக கோரப்படுவதற்கு முடியாததன் காரணமாக இந்த நிலைமை உருவாகி இருந்தது. | வருடத்திற்கான கொள்வனவுகள் சரி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிலே மூலப்பொருள் கொள்வனவுகளுக்குரிய மொத்த பெறுமதி ரூபா 4,788,039 ஆன தேசிய பிரதி நிதித்துவ தரகுச் செலவுகள் கணக்கிற்குட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கிற்குட்படுத்தலில் கைவிடப்பட்டிருத்தல் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. அதை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பிரதிநித்துவ தரகுகள் சரி செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | நிதி நிலைமைக் கூற்றிலே நடைமுறை அல்லாத சொத்துக்ளுக்குள் உள்ளடங்கியுள்ள ரூபா 17,105,398 ஆன பிற்போடப்பட்ட வரி மீதி உறுதிப்படுத்தலுக்காக கணக்கிடுதல் உள்ளடங்களாக விபரமான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் வரி கணக்கிடுதல் சம்பந்தமான ஆவணங்கள் நாளது வரையாக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | உரிய தகவல்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 பெறப்பட வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 வருடங்கள் மற்றும் அதற்கு அதிக கூட்டு மொத்தம் ரூபா 170,893,188 ஆன வியாபார கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்ததுடன் அது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் காணப்பட்ட முழு கடன்பட்டோரில் நூற்றிற்கு 39 ஆகும். | பழைய கடன் மீதியை அறவிடுவதற்கு இப்போதைக்கு வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பழைய கடன் மீதியை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | அரச அச்சக திணைக்களத்தினால் மீளாய்வாண்டிலே 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட மீதியை உறுதிப்படுத்தலின் படி திணைக்களத்திற்கு ரூபா 8,324,416 அறவிடுவதற்கு இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், நிதிக் கூற்றின் பிரகாரம் அது ரூபா 4,012,020 ஆக இருந்ததால் ரூபா 4,312,396 வேறுபாடு காணப்பட்டது. | இந்த வேறுபாட்டிற்கு காரணம் உற்பத்திப் பிரிவினால் நேரடியாக அரச அச்சக திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்ட வேலைக்கிரயமாகும் இதை சரி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அரச அச்சகத் திணைக்களத்துடன் கலந்துரையாடி நிதிக் கூற்றினை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் தேசிய கடதாசி கம்பனியிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 9,753,427 பெறப்பட வேண்டியிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தினால் கடதாசி கம்பனிக்கு செலுத்த வேண்டிய பணம் ரூபா 7,460,675 ஆக காணப்பட்டது. இந்த மீதிகளுக்குள் 06 வருடங்கள் கடந்த கடன் தொகை முறையே ரூபா 7,989,976 மற்றும் ரூபா 5,578,142 ஆக இருந்தும் இந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விடையளிக்கப்படவில்லை. | வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி கம்பனி தற்போது மீண்டும் தம் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன் அந்த நிறுவனத்துடன் கலந்துரையாடி இந்த மீதியை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ திர்மானங்கள் ஆகியவற்றிற்கு இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவம் குறித்த கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2015 மே 25 ஆம் திகதிய PED 1/2015 ஆம் இலக்க அரச வியாபார திணைக்கள சுற்றுநிருபத்தின் 4.2 ஆம் பந்தி | சுற்றுநிருப பணிப்புரையின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் 17 முகாமையாளர்களுக்காக குழு போக்குவரத்துச் சேவையை விநியோகிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளாமல் அதற்கு பதிலாக ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 17,500 வீதம் மீளாய்வாண்டிலே மொத்தம் ரூபா 3.284,798 கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. | தற்போதைக்கு கூட்டுத்தாபனத்தினால் அதிகாரிகளின் போக்குவரத்திற்காக புதிய வாகனத்தை கொள்வனவு செய்வதோ அல்லது வெளிவாகனத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கோ முடியாதுள்ளதால் இவ்வாறு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | உரிய சுற்றுநிருபத்தின் அறிவுரைகளுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) 2018 திசெம்பர் 07 ஆம் திகதிய PED 03/2018 ஆம் இலக்க பொது வியாபார சுற்றுநிருபம். | அரச கூட்டுத்தாபனம் மற்றும் முழுமையாக அரசிற்கு சொந்தமான கம்பனிகளின் பதவியணியினருக்கு போனஸ் கொடுப்பனவு செலுத்தல் குறிப்பிடப்பட்ட சுற்றுநிருப பணிப்புரையின் பிரகாரம் செலுத்த முடியுமான போனஸ் கொடுப்பனவுத் தொகை ரூபா 1,716,000 ஆக இருந்த போதும், மொத்தம் ரூபா 22,097,071 கொடுப்பனவிற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | அடிப்படையில் ஊழியர்களை உற்சாகப்படுத்தலுக்காக அமைச்சின் இணக்கப்பாட்டின் படி கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் இந்த கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. | உரிய சுற்றுநிருபத்தின் அறிவுரைகளுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி பெறுபேறு ரூபா 169,,428,397 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 406,985,154 ஆகும். அதன் படி நிதி பெறுபேறுகளில ரூபா 237,556,757 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் பாடசாலை புத்தக அச்சிட்டு வருமானம் ரூபா 690,208,189 வால் அதிகரித்தமை மேற்குறிப்பிட்ட நிதி பெறுபேற்றின் அதிகரிப்பிற்கு பிரதானமான காரணமாக காணப்பட்டது.

### 2.2 விகித பகுப்பாய்வு

முன்னைய ஆண்டின் 1:0.75 என்ற நடைமுறை விகிதம் மீளாய்வாண்டில் 1:0.6 வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் விரைவு விகிதம் 1:0.34 இலிருந்து 1:0.37 வரை சிறியளவில் அதிகரித்திருந்தது. மேலும், முன்னைய ஆண்டின் முறையே நூற்றுக்கு (0.3) ஆன மொத்த இலாப விகிதம் மற்றும் நூற்றுக்கு (45) ஆன தேறிய இலாப விகிதம் மீளாய்வாண்டிலே முறையே நூற்றுக்கு 17 மற்றும் நூற்றுக்கு 11 ஆக அதிகரித்துக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டிற்கான பாடசாலைப் பாட புத்தகங்களை அச்சிட்டு வழங்குவதற்கான கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு முரணாக 02 தினத்திலிருந்து 70 தினங்கள் வரையான காலதாமதித்தின் பின்னர் அச்சிடப்பட்ட பாடசாலை பாடப்புத்தகங்கள் கையளித்தல் காரணமாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பணத்திலிருந்து ரூபா 69,317,151 தாமதக் கட்டணமாக அறவிடப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்கான பாடசாலைப் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கான மூலப் பொருட்களை உரிய வகையில் எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்குள் கிடைக்கப் பெறாததன் காரணமாக இந்த நிலைமை உருவாகியிருந்தது. | கால நேரத்திற்கு மூலப் பொருட்களை பெற்றுக் கொண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதியில் கட்டளையை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) | பாடசாலை பாடப்புத்தகங்கள் அச்சிடுதல் மற்றும் லாட்டரி சீட்டுக்களை அச்சிடுதலுக்காக முறையே | காகிதாகிகள் பிரிவில் மற்றும் வியாபார அச்சக நடவடிக்கைகள் மூலமாக குறிப்பிடத்தக்க வருமானமொன்று கிடைக்கப் | வருமான மூலகங்களை வெவ்வேறு வகைப்படுத்தலுக்காக அரச அச்சக கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தினாலும் |

| | | | |
|---|---|---|---|
| | கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திடமிருந்து மற்றும் தேசிய லொத்தர் சபையிடமிருந்து ரூபா 979,237,857 மற்றும் ரூபா 268,941,482 ஆக மொத்தம் ரூபா 1,248,179,339 வருமானமொன்று கிடைக்கப் பெற்றிருந்தது. இது வருடத்தின் மொத்த வருமானமான ரூபா 1.593,815,189 இன் நூற்றுக்கு 78 ஆக இருந்ததுடன் கூட்டுத் தாபன அதன் வருமான மூலகங்கள் வெவ்வேறு வகைப்படுத்தப்படாமல் இரண்டு வருமான மூலகங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பெற்றுள்ளது. | பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிலே வெளியீட்டு திட்டத்தின் படி 63 புத்தகங்கள் அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு ரூபா 25,530,000 வெளியீட்டு வருமானமொன்றை ஈட்டிக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உண்மையாக ரூபா 2,872,246 வருமானமொன்றை மாத்திரம் ஈட்டியிருந்தது. | மீளாய்வாண்டின் வெளியீட்டுத் திட்டத்தின் படி 63 புத்தகங்கள் அச்சிடப்பட்டு விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கூட்டுத் தாபனத்தில் நிலவிய நிதி நிலைமையின் அடிப்படையில் அதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய முதலீடு மேற்கொள்ளல் அடுத்த வருடம் வரை பிற்போடப்பட்டதுடன் பதவியணியினரை விற்பனைப் பிரிவின் காரியங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டது. | கூட்டுத்தாபனத்தின் வருமான மூலகங்களை வெவ்வேறு வகைப்படுத்தலுக்குட்படுத்தல் காலத்தின் தேவையாக கருதப்படுவதனால் அது விடயமாக அச்சக கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தில் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதனால் வெளியீட்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் அச்சக நடவடிக்கைகளுக்காக நேரடியாக தாக்கம் செலுத்துகின்ற மத்திய தரத்திலான 05 முகாமையாளர்கள் கனிஷ்ட தரத்திலான 12 பேர் விற்பனை மத்திய நிலைய பொறுப்பான 08 உத்தியோகத்தர்கள் மற்றும் 78 முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) உத்தியோகத்தர்களாக 107 நபர்களின் பதவிகள் மீளாய்வாண்டிலே வெற்றிடமாக | எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலில் நேரடியாக தாக்கம் செலுத்தும் இந்த பதவிகள் துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| காணப்பட்டது. | | |
| (ஆ) கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிர்வாக மற்றும் மனிதவள அபிவிருத்தி முன்மொழிவுகளின் படி அச்சக துறைக்கு சம்பந்தமான 06 பயிற்சி வேலைத்திட்டங்கள் உள்ளடங்கலாக 15 வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியிலும் எவ்வித பயிற்சி வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தில் நிலவிய நிதி நிலைமையின் அடிப்படையில் அண்மை காலங்களில் பயிற்சி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | கூட்டுத்தாபனத்தின் அச்சக நடவடிக்கைகளின் வினைத்திறனை அதிகரித்துக் கொள்வதற்கு இந்த பயிற்சி வேலைத்திட்டங்கள் துணைப்புரிவதுடன் அவ்வாறான வேலைத் திட்டங்கள் சரியான நேரத்திவ் இடம் பெறுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |